Previous Date of examination : 03.11.2020

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No. 25/2020**

2023-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி **அ..சா.69-ன்** சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | துர்கா | வயது | 48/2023 |
| கணவர் பெயர் | | ஜாதி | |
| தொழில் | காவல் ஆய்வாளர் | மதம் | |
| ஊர் | திருத்துறைப்பூண்டி | தாலுக்கா | |

( எதிரிகள் ஆஜர்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது திருத்துறைப்பூண்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 11.04.2019 ம் தேதி திருவாரூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட குற்ற பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது, குற்ற எண் 01/2019 ச/பி. 120 (பி), 406, 420, இதசவின்படியான வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி, த/பெ. பாலகிருஷ்ணன் என்பவரை நீதிமன்றம் மூலம் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க மனு தாக்கல் செய்தேன்.

**2.** பின்னர், 12.04.2019 ம் தேதி திருவாரூர் பெண்கள் கிளை சிறையில் இருந்து கனம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட 2 வது எதிரியை இரண்டு நாள் போலீஸ் காவலில் எடுத்து 13.04.2019 ம் தேதி 2 வது எதிரியை விசாரித்தபோது, சாட்சிகள் ரமேஷ், கலையரசன் ஆகியோர் முன்னிலையில் 2 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, 2 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 2 வது எதிரியின் வீட்டிற்கு 10.30 மணிக்கு சென்றபோது, 2 வது எதிரி எடுத்து ஆஜர்படுத்திய கும்பகோணம் - மன்னார்குடி என தலையிடப்பட்ட 34 + 22 நபர்கள் அடங்கிய பணம் கொடுத்தவர்களின் இரண்டு பக்க விபர குறிப்பு அசல் மற்றும் ராஜேஷ்குமார், மார்கரேட்சாந்தினி, சிவரஞ்சினி, முத்துப்பாண்டி, சுரேஷ், தாசன், தர்மராஜ் ஆகியேர்களது போட்டோவுடன் கூடிய ரெஸ்யூம் மற்றும் சான்றிதழ் நகல்கள் அடங்கிய ஆவணங்கள் மற்றும் பிள்ளையார் படம் போட்ட 2017 ம் வருடத்திய டிசம்பர் 24 மார்கழி 9 என்ற பக்கத்தில் 2 வது எதிர தன் கைப்பட எழுதிய 12 நபர்களின் பெயர்கள் ஆகியவற்றை சாட்சிகள் ரமேஷ் மற்றும் கலையரசன் ஆகியோர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். (

**கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.13 ஆகவும், 7 நபர்களின் போட்டோவுடன் கூடிய ரெஸ்யூம் மற்றும் அதனுடன் முன் பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ள பெயர் விபரம் அடங்கிய சீட்டுக்கள் ஆகியவை ஏற்கனவே அ.சா.ஆ.14 வரிசையாகவும், டைரி ஏற்கனவே அ.சா.ஆ.15 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது.** )

**3.** 2 வது எதிரியை எனது விசாரணையை முடித்து நீதிமன்றம் முன்பாக 13.04.2019 ம் தேதி ஆஜர்படுத்தினேன். பின்னர் 28.05.2019 ம் தேதி வழக்கின் புகார்தாரரான சுரேஷ் என்பவரை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே மகஜர் சாட்சிகளான ரமேஷ் மற்றும் கலையரசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் இளவழகன், நகுலன், லதா, அரவிந்த்குமார், சண்முகசுந்தரம், தேவிபாலா, ஜெயகீதா, காமாட்சி, சுரேஷ் அகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**4.** 10.06.2019 ம் தேதி இவ்வழக்கின் சாட்சிகளான சாய்விக்னேஷ்,, அய்யப்பன், குமரப்பன், ஆனந்தபாபு, கலியமூர்த்தி, ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 10.07.2019 ம் தேதி சாட்சிகள் சண்முகப்பிரியா, ஆரோக்கியராஜ், குணசீலன், ஜெயசங்கர், யோகலெட்சுமி, ஆனந்தநாயகி, பாலசுந்தர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். நான் பணி மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பினை நிலையத்தில் ஒப்படைத்து விட்டு சென்றேன்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நாளிலிருந்து எத்தனை நாட்களுக்கு பின்னர் நான் 2 வது எதிரியை விசாரித்தேன் என்றால் 08.04.2019 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் 13.04.2019 ம் தேதி 2 வது எதிரியை விசாரித்தேன். 2 வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கியபோது எத்தனை பேர் உடனிருந்தார்கள் என்றால் சாட்சிகள் ரமேஷ், கலையரசன் ஆகியோர் மட்டும் உடனிருந்தார்கள். ஒப்புதல் வாக்குமூலமானது கையால் எழுதப்பட்டதா என்றால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதாகும். நான் 2 வது எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றினேனா என்றால் இல்லை. நான் 2 வது எதிரியை விசாரித்தபோது அவர் என்ன வேலையில் இருந்தாரா என தெரிய வந்ததா என்றால் எனக்கு தெரிய வந்தது. 2 வது எதிரியை விசாரிக்கும்போது முன் அனுமதி பெற்றேனா என்றால், நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துதான் 2 வது எதிரியை போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தேன். 2 வது எதிரி எங்கு வேலை செய்தார் என்றால், திருவாரூர் மாவட்ட நீதிபதியிடம் அலுவலக உதவியாளராக இருந்துள்ளார்.

**2.** நான் சாட்சிகள் தேவிபாலா, ஜெயகீதா, நகுலன், காமாட்சி, லதா, அரவிந்த்குமார், சண்முகசுந்தரம், ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கியதாக சொல்லும் தேதியை நான் திருத்தியுள்ளேன் என்றால் கணினியில் தட்டச்சு பிழை ஏற்பட்டதால் அதனை

நான் திருத்தியுள்ளேன். 08.04.2019 ம் தேதியே மேற்படி சாட்சிகளை நான் விசாரித்து விட்டேன் என்றும், ஒப்பதல் வாக்குமூலம் 2 வது எதிரியிடம் பெற்றபிறகு அவர்களை விசாரித்ததாக காட்டுவதற்காக தேதியை திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில் சுரேஷ் என்பவரிடம் மறுவாக்குமூலம் பெற்றேன் என்றால் 28.05.2019 ம் தேதி பெற்றேன். மேற்படி சுரேஷ், எனது விசாரணையில் என்னிடம் ரெஸ்யூம் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சுரேஷ் அவர் வசமிருந்த நகலை கொடுத்தார். 2 வது எதிரியிடமிருந்து 13.04.2019 ம் தேதியே அசல் ஆவணங்களை மகஜரில் கைப்பற்றினேன்.

3. **சுரேஷ்** எனது விசாரணையில், சக்திவேல் வேலை சம்மந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் புகார் கொடுத்திருப்பதாகவும், தற்சமயம் தன்னிடம் பணம் இல்லை என்றும், விரைவில் கொடுத்து விடுவதாக சக்திவேல் சொன்னதாகவும் எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதன்மூலம் 2 வது எதிரி உயர்நீதிமன்றத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரிய வந்தது என்றால் சுரேஷ் தனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். அதுபற்றி நான் விசாரிக்கவில்லை. 1 வது எதிரி உயர்நீதிமன்றத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியும் என்றும், 1 வது எதிரியை இவ்வழக்கில் சிக்க வைக்க வேண்டுமென்பதற்காக 2 வது எதிரிக்கு உறுதுணையாக நான் செயல்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் 1 வது எதிரியை சாட்சியாக சேர்க்காமல் அவரை எதிரியாக சேர்த்தது தவறு என்றால் சரியல்ல. எனக்கு வேண்டிய நபர்களுடன் கலந்தாலோசித்து அவர்கள் கூறியபடி விசாரணை செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் தன்மையை பற்றி எனக்கு தெரியவில்லை என்றும், யாரோ தயார் செய்த பேப்பரில் நான் கையெழுத்து மட்டும் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் தேதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விசாரணை செய்த சாட்சிகள் அனைவரும் இரண்டாவது எதிரியை தங்களுக்கு தெரியாது என்றும், 2 வது எதிரியை பணம் கொடுக்க சந்தித்தது இல்லை என்றும், சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். சாட்சிகள் என்னிடம் சொன்ன வாக்குமூலத்தைதான் நான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சிகள் சொல்லாத விபரங்கள் எதையும் நான் வாக்குமூலமாக பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

2. 2 வது எதிரி 1 வது எதிரியினுடைய வீட்டில் வாடகைக்கு வசித்து வந்ததாக கூறுவதற்கு ஆவணங்கள் எதையும் நான் கைப்பற்றி வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரியின் வீட்டில் 2 வது எதிரி வசிக்கவில்லை என்பதால்தான் நான் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜரில் 13.04.2019 ம் தேதி காலை 10.30 மணிக்கு 2 வது எதிரியிடமிருந்து ஆவணங்களை கைப்பற்றியதாக சொல்கிறேன் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் ஆவணங்கள்

வீட்டின் எந்த இடத்தில் இருந்தது என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் மறைத்தோ அல்லது ஒளித்தோ வைக்கப்பட்டு இருந்ததாக மகஜரில் எதுவும் சொல்லப்படவில்லைஎன்றால் சரிதான். 2வது எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆவணங்கள் எதுவும் தான் மறைத்து வைத்துள்ளதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் மறைத்து வைத்துள்ளதாக சொல்லப்படவில்லை. வீட்டில் வைத்திருப்பதாக சொல்லியுள்ளார். நான் சொல்லும் ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் 2வது எதிரியை மிரட்டி ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2வது எதிரியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, நான் மிரட்டி ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக சொன்னால் 2வது எதிரியினுடைய குடும்ப உறுப்பினர்களை வழக்கில் சேர்த்து விடுவதாக நான் மிரட்டியதால், நீதித்துறை நடுவரிடம் 2வது எதிரி மிரட்டி ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்தபோது எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவ்வாறு குறிப்பிடும் பழக்கம் நடைமுறையில் இல்லை. சாட்சிகள் எத்தனை மணிக்கு கையெழுத்து செய்தார்கள் என குறிப்பிட்டு கையெழுத்து போடவில்லை என்றால் அவ்வாறு நேரம் குறிப்பிட்டு கையெழுத்து போடும் நடைமுறை இல்லை. வேறொரு வழக்கில் புகார் கொடுக்க வந்த கலையரசன் என்பவருக்கு நான் சகாயம் செய்வதாக சொல்லி' இந்த வழக்கில் சாட்சியாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல 2வது எதிரியிடம் என்னிடம் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அதனடிப்படையில் 2வது எதிரியிடமிருந்து ஆவணங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லைஎ ன்றும் சொன்னால் சரியல்ல. 1வது எதிரியினுடைய வீட்டில் 2வது எதிரி வாடகைக்கு வசித்ததாக நான் சொல்லும் விபரம் பொய் என்றால் சரியல்ல. முகாந்திரமின்றி 2வது எதிரியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. முகாந்திரம் இல்லாத நிலையில் 2வது எதிரி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக நான் ஆவணங்களை ஜோடித்துள்ளதாக சொன்னால் சரியல்ல.. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டள்ள சான்றாவணங்கள் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒம்/- எல். ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.